


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று(21.6.2025) முகாம் அலுவலகத்தில், காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2025) முகாம் அலுவலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சந்தித்து, புகையிலை இல்லாத இளைஞர்கள் திட்டம் : இளைஞர்கள் திட்டம் 2.0ஐ சிறப்பாக செயல்படுத்தியதற்காக, தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சிறப்பாக செயல்படும் மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டு, தேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் தேசிய மதிப்பாய்வுக் கூட்டத்தின் போது ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டி.எஸ். செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர். ஆர்.மகேந்திரன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தொல்லியல் ஆய்வுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளது திராவிட மாடல் அரசு: மாஃபா பாண்டியராஜன் பச்சைப் பொய் சொல்கிறார்!

# தமிழர் தொன்மைக்கும் - தமிழர் பண்பாட்டுக்கும் துரோகம் செய்துவருபவர் எடப்பாடி பழனிச்சாமி!

### திமுக மருத்துவரணிச் செயலாளர் – மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. பேட்டி!

சென்னை, ஜூன் 22 -

தொல்லியல் ஆய்வுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளது திராவிட மாடல் அரசு என்றும் பச்சைப் பொய் சொல்கிறார் முன்னாள் அமைச்சர் மாஃபா பாண்டியராஜன் என்று தமிழர் தொன்மைக்கும் - தமிழர் பண்பாட்டுக்கும் துரோகம் செய்துவருபவர் எடப்பாடி பழனிச்சாமியைத் தமிழ்நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்றும் திமுக மருத்துவரணிச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான மருத்துவர் நா.எழிலன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

இது குறித்து திமுக மருத்துவரணிச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மருத்துவர் எழிலன் 20.06.2025 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தது குறித்த செய்தி அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் கீழடி ஆய்வு பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் உங்கள் அனைவருக்கும் தெரியும். முதலமைச்சர் தலைமையில் உள்ள திராவிட மாடல் அரசு கீழடிக்காக மேற்கொண்ட பணிகளைப் பற்றியும் அறிவீர்கள். கீழடி ஆய்வின் போது அதை மேற்கொண்ட அமர்நாத் பணி மாற்றம் செய்த, கீழடி ஆய்வின் உண்மைத் தன்மையை கேள்வி எழுப்பிய பா.ஜ.க. அரசை கண்டித்து தி.மு.க. மாணவரணி சார்பில் போராட்டம் நடத்தியது.

அ.தி.மு.க.வின் . மாஃபா பாண்டியராஜன் அதுபற்றி கருத்துகளை தெரிவித்துள்ளார். கீழடி வரலாறு குறித்து முதலில் தெரிவித்துவிட்டு, பிறகு அவருக்குப் பதில்கள் சொல்கிறேன்.

பள்ளிக்கூட ஆசிரியர் வி.பாலசுப்பிரமணியன் 1971 ஆம் ஆண்டு கீழடி நாகரிகம் குறித்து சில ஆய்வுத் தரவுகளை எடுத்து கூறியதன் பின், அப்போதை ஐக்கிய முற்போக்கு அரசாங்கத்தில்



2013-14-ல் கீழடி ஆய்வு தளம் என ASI-க்கு ஒரு ரிப்போர்ட் சமர்பித்தது.

**ஆய்வை நிறுத்திக்கொள்ளச் சொன்ன பா.ஜ.க. ஆட்சி!**

2014-ல் பா.ஜ.க. அரசு வந்தபின் அமர்நாத் தலைமையில் இரண்டு கட்ட அளவில் தொல்லியல் ஆய்வு நடத்தினர். 2016 முடியும் தருவாயில் அந்த ஆய்வை நிறுத்தி கொள்ளுமாறு நிர்பந்திக்கப்பட்டார்; அந்த ஆய்வை மூட சொன்னார்கள்; தனியார் நிலத்தில் ஆய்வு நடப்பதாகவும், நீதிமன்றத்தில் வழக்கு நடப்பதாகவும் அகழ்வாராய்ச்சியை ASI நிறுத்துகின்றனர். அந்த சூழலில் முத்தமிழர் கலைஞர் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் "அந்த அறிக்கையில் கீழடி நாகரித்துக்கும் - சிந்துவெளி நாகரிகத்துக்கும் உள்ள தொடர்பை கீழடி ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. இதுவரை சொன்ன பொய் கதைகள் எல்லாம் இதன் மூலம் மாற்றியமைக்கப்படுகிறது; இந்த தமிழ்நாட்டின் தென்னகத்தின் தொடக்கம்" என கலைஞர் குறிப்பிட்டார்.

அந்த ஆய்வின் போது அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், கனிமொழி அவர்கள் கீழடி ஆய்வுக்கே சென்றனர். ASI இதை நிறுத்தியதும் கனிமொழி அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்; அந்த வரலாற்று சிறப்புமிக்க வழக்கில், எதற்காக ஆய்வுகளை நிறுத்தினீர்கள் என கேள்வி எழுப்பினர்.

பலரும் குரல் எழுப்பியதால் அ.தி.மு.க.வினர் மீண்டும் வழக்கில் பதில் அளித்து, அதற்கு நாங்கள் உதவி செய்வதாக கூறினர். கனிமொழி அவர்களின் வழக்கு தீர்ப்பில் 1. அகழ்வாராய்ச்சியை தொடர்ந்து நடத்தவேண்டும்; 2. மைசூருக்கு கொண்டு சென்ற பொருட்கள் மீண்டும் தமிழகத்திற்கு கொண்டு வர வேண்டும்; 3. இதை பாதுகாக்க ஒரு அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என தீர்ப்பு வழங்கியுள்ளனர் என்று கூறினர். எனவே நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில்தான் அ.தி.மு.க. அரசு-எடப்பாடி அரசு கீழடி ஆய்வைத் தொடர்ந்தது.

**கீழடி அகழாய்வு முழு அளவில் ஊக்குவிக்கப்பட்டது!**

திராவிட மாடல் முதலமைச்சர் ஆட்சியில் கீழடி அகழாய்வு முழு அளவில் ஊக்குவிக்கப்பட்டது. அது குறித்த ஆய்வுமுடிவுகளைப் பற்றி முதல்முறையாக சட்டமன்றத்தில் பேசினார்.

**மாஃபா பாண்டியராஜன் கூறிய பொய்!**

நிதி ஒதுக்கீடு குறித்து தவறான தகவலை அதிமுகவினர் சொல்லியுள்ளனர்; உதயகுமார் அவர்கள் ரூ.55 லட்சம் ஒதுக்கியுள்ளதாக கூறினார். இன்றைக்கு மாஃபாஅவர்கள் ரூ.105 கோடி ஒதுக்கியதாக கூறியுள்ளார்.

ஆனா அதிமுக ஆட்சியில் இரண்டே இரண்டு அகழாய்வுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். ஒன்று திருவள்ளூர் மாவட்டத்தில் பட்டறை பரம்மத்தூரில் ரூ.5 லட்சம் ஒதுக்கினர். கீழடிக்கு ரூ.55 லட்சம் ஒதுக்கியுள்ளனர். ஒரு அப்படமான பொய்யாக ரூ.105 கோடி செலவு செய்ததாக சொல்லியுள்ளனர்.

நாம் எவ்வளவு செலவு செய்து இருக்கிறோம் என பட்ஜெட் குறித்த அறிக்கை சட்டமன்றத்தில் சொன்னதை நான் திரும்பவும் உங்களிடம் சொல்கிறேன்.

**கழக ஆட்சி ஒதுக்கிய ரூ.27 கோடி!**

2021 - கீழடி, சிவகலை, கங்கை கொண்ட சோழப்புரம், மயிலாடுப்பாறை, கொர்க்கை, அதிச்சநல்லூர், கொடுமணல் - இந்த இடத்தில் ஆய்வு நடத்தி இருக்கிறோம் - ரூ.5 கோடி

2022 - கீழடி, சிவகலை, கங்கை கொண்ட சோழப்புரம், மயிலாடுப்பாறை, வெப்பங்கோட்டை, துலக்கரப்பட்டை - ரூ. 5 கோடி

2023- கீழடி, சிவகலை, கங்கை கொண்ட சோழப்புரம், வெப்பங் கோட்டை, பட்டறை பெருமத்தூர் - ரூ.5 கோடி

2024 - மருங்கணூர், கொங்கல் நகரம் - ரூ.5 கோடி

2025 - மற்ற இடங்களுடன் சேர்த்து வெல்லலூர், அதிச்சநல்லூர் ரூ.7 கோடி

மொத்தம் 30 இடங்களில் ஆய்வு செய்து 37 இடங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டு ரூ.27 கோடி ஒதுக்கினர்.

ரூ. 1 கோடி செலவு செய்த அதிமுக எங்கே? ரூ.27 கோடி செலவு திராவிட மாடல் அரசு எங்கே?

அப்போதே, 2016-ல் கீழடி ஆய்வு நிறுத்தப்படும்போது ஏன் அதிமுக கண்டன குரல் ஏன் எழுப்பவில்லை? தனிநபராக கனிமொழி அவர்கள்தான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ஏன் எடப்பாடி அரசு அதை செய்யவில்லை?

தமிழ்நாட்டுத் தேர்தல் அரசியலுக்குத் தொன்மை அரசியலுக்கும் அதிக தொடர்பு உள்ளது. யார் யாரெல்லாம் தமிழர் தொன்மைக்கும், தமிழர் பண்பாட்டுக்கும் பாதுகாப்பாக உள்ளார்கள்; யார் யாரெல்லாம் தமிழர் தொன்மைக்கும், தமிழர் பண்பாட்டுக்கும் துரோகம் செய்கின்றார்கள் என்பதை மக்கள் தெளிவாகப் பார்த்துவருகின்றார்கள். தமிழர் தொன்மைக்கும், தமிழர் பண்பாட்டுக்கும் துரோகம் செய்துவரும் எடப்பாடி பழனிச்சாமியைத் தமிழ்நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

இவ்வாறு மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

## கீழடியில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொண்ட

# ஒன்றிய பா.ஜ.க. அரசை அ.தி.மு.க. கண்டிக்காதது ஏன்?

### அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி.ராஜா சரமாரி கேள்வி!

சென்னை, ஜூன் 22 -

கீழடிக்காக ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து அ.தி.மு.க. வாய் திறக்காமல் தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மீது பாய்வது ஏன்? என்று அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா சரமாரி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழர் நாகரீகம் உலகின் மூத்த நாகரீகம் என நிறுவும் கீழடி சான்றுகளை அவமதிக்கும் ஒன்றிய அரசின் அலட்சியத்தையும், மாற்றாந்தாய் மனப்பான்மையையும் எதிர்க்கட்சியான அ.தி.மு.க. இப்போது வரை கண்டிக்காதது ஏன்?

கீழடிக்காக அ.தி.மு.க. குரல் கொடுக்காதது ஏன்?

பா.ஜ.க.விடம் கூட்டணியில் இருப்பதன் ஒரே காரணத்திற்காக தமிழரின் தொன்மையான நாகரிகத்தைக் காக்க குரல் கொடுக்காமல் 'உறங்குவது ஏன்' என்ற நியாயமான கேள்வியை எழுப்பிய @DMKITWing பதிவிற்கு, தகாத அர்த்தங்களைக் கற்பித்து நமது எதிர்க்கட்சியினர் தங்



களைத் தாங்களே ஏன் தாழ்த்திக்கொள்கிறார்கள்?

நியாயமாக வந்திருக்க வேண்டிய கோபம் என்ன?

தொன்மை தமிழர் நாகரீகத்தின் ஆதாரமான கீழடியை புறங்கையில் தள்ளும் ஒன்றிய மைனாரிட்டி பாஜக அரசின் நடவடிக்கைகளுக்கு அல்லவா கோபம் வந்திருக்க வேண்டும்?

இப்போது வரை அப்படியொரு கோபம் ஒன்றிய அரசின் மீதும், பா.ஜ.க. மீதும் அதிமுகவிற்கு வரவேயில்லையே ஏன்?

ஒன்றிய அரசின் வஞ்சகத்தை ஒருசேர எதிர்த்து நிற்க வேண்டிய நேரத்தில் இப்படி திசை திருப்பும் வேளைகளில் அற்பமாக இறங்குவது தமிழர் விரோத செயல் இல்லையா?

எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் இன்று BP எகிறி கதறிக்கொண்டிருக்கிறார் என்று உடன்பிறப்புகள் தெரிவித்தனர் : )

ஆனால் தமிழ் வளர்த்த மதுரையைச் சேர்ந்த அண்ணன் அவர்கள்கூட இது வரை கீழடிக்காக குரல் கொடுக்கவில்லையே?

எது தடுக்கிறது?

என் மீது அவர் காட்டும் கோபம் ஏன் தமிழர் பெருமையை சிதைப்பவர்கள் மீது வரவில்லை?

இன்றுகூட மதுரையின் பெருமைக்காக அவர் பாய்ந்து எழாமல் "கீழடியை வைத்து நமது தொன்மையை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை" என்று சொன்னவர் பேட்டி அளித்தது ஏன் !

@DMKITwing/#Wing2point0 #உடன்பிறப்புகளே!

எதிர்க்கட்சியினரின் அவதூறுகளை, என் மீதான அவர்களின் விமர்சனங்களை நான் பார்த்துக்கொள்கிறேன்.

பாவம், உண்மை தெரிந்தும் யாரோ சொல்லி சாடுகிறார்கள். அந்த அரசியல் எனக்கு தெரியும் : )

நீங்கள் உங்கள் உழைப்பை இந்த கவனச் சிதறல்களுக்கு இரையாக்க வேண்டாம் !

கழக மாணவரணி கீழடிக்காக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறார்கள். அதன் தாக்கத்தை மடைமாற்றவே அதிமுகவினர் கண்டதை வைத்து கம்பி கட்டுகிறார்கள்.

நாங்கள் கலைஞரின் வார்ப்புகள்.

எவர் எதிர் வரினும், எந்த இடர் வரினும், தமிழ்நாட்டின் நலனுக்காகவும், தமிழர் நலனுக்காகவும் இந்தப் போர் தொடரும்.

தமிழினத்தின் உரிமைக்காக போராடும், இரத்தம் சிந்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் நாங்கள் !

இனத்தை, மொழியை அழிக்க நினைப்பவர்களுக்கும், துணை போகிறவர்களுக்கும் எதிரான முன்கள வீரர்களான @DMKITwing பணி தொடரும்.

கேள்விகளும் தொடரும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

# "திராவிட மாடல் அரசின் திட்டங்களைப் பயன்படுத்தி கல்வியில் முன்னேறுங்கள்!"

### கலைஞர் நூலக மாணவர் சந்திப்பில் கழக இளம்பேச்சாளர் எஸ்.மாறன் பேச்சு!

சென்னை, ஜூன் 22-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் 'கலைஞர் நூலகம்' அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 103 கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் முதல் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் வரை பலருக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றன.

இதில் ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 18.06.2025 அன்று 117-வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்



திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் எஸ்.மாறன் கலந்துகொண்டு, கல்வியின் அவசியம் குறித்து மாணவர்களிடம் எடுத்துரைத்தார். மேலும், "குலத்தொழிலை ஊக்குவிக்கும் வகையிலான கல்வித் திட்டத்தை ராஜாஜி வகுத்தார். திராவிட இயக்கத்தின் போராட்டத்தால் அந்த பாகுபாடான கல்வி முறை ஒழிந்தது. தற்போது, ஒன்றிய பா.ஜ.க. அரசு அதேபோலத்தான் புதிய கல்விக் கொள்கையை கொண்டு வருகிறது. தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வியை அழிக்க ஆரியக் கூட்டம் எந்த வேடத்தில் வந்தாலும், தி.மு.கழகம் அதை எதிர்த்துப் போராடும். ஆரியத்திற்கு நேரெதிராக, கல்வியை மேம்படுத்த பல திட்டங்களைத் தீட்டியுள்ளார் நமது திராவிட மாடல் முதல்வர். அத்திட்டங்களை சரியாகப் பயன்படுத்தி கல்வியில் முன்னேற வேண்டியது மாணவர்களின் கடமை" என உரையாற்றினார்.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் என்.மோகன்வேல், ஜே.எம்.எச்.இம்ரான், பகுதி அமைப்பாளர்கள் வ.வேல்குமார், புவனேஷ் ஸ்ரீ வட்சன், பகுதி துணை அமைப்பாளர்கள் சந்துரு, எஸ்.பிரதீப், ஆ.ப.கதிரவன், ஆர்.ராஜேஷ் (எ) காந்தி, சி.தனுஷ்கோடி ஆதித்யன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# கலைஞர் நூலகத்தில் மாணவர் வாசகர் சந்திப்பு!

### மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க முயற்சி!

சென்னை, ஜூன் 22-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் 'கலைஞர் நூலகம்' அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 103 கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் முதல் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் வரை பலருக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றன.

இதில் ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர்



நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக 19.06.2025 அன்று 109-வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் வி.பாலமுருகன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு, வாசிப்பின் முக்கியத்துவம் மற்றும் நூலகத்தின் பயன்பாடு குறித்து எடுத்துரைத்தார்.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், துணை அமைப்பாளர் என். மோகன்வேல், பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம், பகுதி அமைப்பாளர் வ.வேல்குமார், பகுதி துணை அமைப்பாளர்கள் சுரேஷ், ஆர்.ராஜேஷ் (எ) காந்தி, சி.தனுஷ்கோடி ஆதித்யன், ஸ்ரீதர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.